2010 ஏப்ரல் 8] [திரு. தங்கம் தென்னரசு]

கொடுப்பது என்பதே கிடையாது. நிகழ்ந்திருக்கக்கூடிய நிகழ்வு என்பது, முற்றிலும் எதிர்பாராத நிகழ்வு. மாணவர்கள் இப்போதுதான் அந்தத் தேர்வுகளுக்குத் தயார் செய்திருக்கிறார்கள். மீண்டும் அவர்களுக்கு அந்த வாய்ப்பைக் கொடுக்கிறபொழுது, நாளைக்குக் காலையிலேயே எழுதுங்கள் என்று சொல்லவில்லை. ஒரு குறிப்பிட்ட காலம் கொடுத்துவிட்டுச் செய்ய இருக்கிறோம். ஏற்கெனவே அந்த மாணவர்கள் தயார் செய்திருக்கிறார்கள். நான் நியாயப்படுத்துவதற்காகச் சொல்லவில்லை. இருக்கக்கூடிய சூழ்நிலை இந்த நிலையிலே இருக்கிறது. எனவே, இதுதான் பொருத்தமாக இருக்கும் என்று அரசு கருதுகிறது.

6. அறிக்கைகள் அளித்தல்

மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மனுக்கள் குழுவின் தலைவர்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவையின் 2009–2010 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் எழுபத்து மூன்றாவது முதல் எழுபத்தாறாவது வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

5. தகவல் கோரல்—தொடர்ச்சி

(இ) பேரவைக்குள் உறுப்பினர்கள் தண்ணீர் பருகுவதற்கு அனுமதித்தல் மற்றும் உறுப்பினர்களின் வாகனங்களை வளாகத்தின் அனைத்து வழிகளிலும் அனுமதித்தல்

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு வார்த்தை. இங்கே மாண்புமிகு அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், உடல்நிலை பாதிக்கப்பட்ட அமைச்சர்களும், உறுப்பினர்களும் இருக்கின்றோம். ஆகவே, நீங்கள் தயவுசெய்து இங்கே தண்ணீர் அருந்துவதற்கு அனுமதியளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: லாபியிலே இடம் அதிகமாக இருக்கிறது.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே போய்விட்டு வர முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: லாபியிலே இடம் நிறைய இருக்கிறது.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீர் குடிப்பதற்கு மட்டும் நீங்கள் அனுமதி கொடுங்கள். தண்ணீர் இல்லையென்றால் எல்லோரும் என்ன பண்ண முடியும்? தண்ணீர் குடிப்பதற்கு மட்டும் நீங்கள் அனுமதி கொடுங்கள். சாப்பிடுவதற்கு அனுமதிக்க வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டப் பேரவைக்குள் வந்து, பொட்டலங்களை வைத்துக்கொண்டு, கடலையைக் கொரித்துக்கொண்டிருப்பது, இதெல்லாம் இருக்கிறது. அந்த மாதிரியான பழக்கம் இருக்கிறது.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் அன்றைக்கு அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திலேகூட பேசினோம். நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்கூட, இவ்வளவு பெரிய அரங்கத்திற்குள்ளே உட்கார்ந்து கொண்டு சாப்பிடுவது, தண்ணீர் அருந்துவது எல்லாம் வேண்டாம் என்று சொன்னார்கள். அதற்கு நாங்களும்கூட ஒத்துக்கொண்டோம். ஆனால், நடைமுறை சிரமங்களை சில உறுப்பினர்கள் வந்து சொல்கின்றபோது, நாம் எடுத்த முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இருப்பதாக நான் கருதுகிறேன். ஏனென்று சொன்னால், சில உறுப்பினர்களுக்கு 30 நிமிடங்களுக்கு ஒரு முறையாவது தண்ணீர் அருந்த வேண்டியிருக்கிறது. ஆகவே, நான் என்ன வேண்டுகோள் விடுக்கிறேன் என்று சொன்னால், சிறிய பாட்டில்களில் தண்ணீரை ஒவ்வொரு இருக்கைக்கும் கீழே வைத்துவிட்டால்கூட, அதை நாங்கள் எடுத்துக் குடித்துவிட்டு, பேசாமல் வைத்துவிடுவோம். ஆனால், தண்ணீரே குடிக்க முடியாது, அதற்குக்கூட நாங்கள் வெளியேதான் போகவேண்டுமென்று சொன்னால்—பெரிய லாபி. எங்கே தண்ணீர் இருக்கிறது என்பதைக் கண்டுபிடிப்பதுகூடக் கஷ்டமாக இருக்கிறது.

2010 ஏப்ரல் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே திரும்பிப் பாருங்கள். அங்கேயே தண்ணீர் வைத்திருக்கிறார்கள். அந்த நுழைவாயில் அருகில் பாருங்கள். அந்த நுழைவாயிலின் அருகில் ஸ்கிரீனுக்குக் கீழே இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஸ்கிரீனுக்குக் கீழே வைத்திருக்கிறோம். அதே மாதிரி இந்த நான்கு நுழைவாயில்களின் அருகிலும் வைத்துவிடுகிறோம். அதிலே ஒன்றும் பிரச்சினையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஒன்று சொல்கிறேன். திரு. கோவை தங்கம், நீங்கள் முந்திரிப் பருப்பு கொண்டு வந்து அவைக்குள் ஒவ்வொருவருக்கும் கொடுக்காதீர்கள். அவைக்குள் கொடுக்கக்கூடாது. (குறுக்கீடு) திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், என்ன? சொல்லுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொருவருக்கும் ஒரு தண்ணீர் பாட்டிலைக் கீழே வைப்பதிலே ஒன்றும் சிரமம் இல்லை.

HON'BLE SPEAKER: We will consider.

THIRU. S. PETER ALPHONSE: Please consider it positively and favourably.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: All right. மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு தாங்கள் அதுகுறித்துப் பரிசீலிப்பதாகச் சொன்னதற்கு நன்றி. ஏற்கெனவே அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தின்போதும் இந்தப் பிரச்சினையை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டப் பேரவைக்கு வருவதற்காகக் கட்டப்பட்டுள்ள இந்த மாபெரும் அரங்கில் ஒரு வழியின் வழியாகத்தான் வருவதற்கு நீங்கள் அனுமதிக்கின்றீர்கள். மற்ற வழிகளில் எங்களுக்கு அனுமதியில்லை. வண்டி வாகனங்கள் தடுத்து நிறுத்தப்படுகின்றன. பெரும்பான்மையான சட்டமன்ற

உறுப்பினர்கள் நடந்தே வருகின்றோம். ஒரு சிலர் அவசர காலத்தில், வெளியூரிலிருந்து வந்து, திருமணம் போன்ற விழாக்களுக்குச் சென்றுவிட்டு இந்த வாயில் வழியாக வருகின்றபோது, அங்கு வண்டி தடுத்து நிறுத்தப்படுகின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்று சொன்னால், அதைப் பெருந்தன்மையோடு ஏற்றுக் கொள்கிறோம். பாதுகாப்புக் கருதி அவர்கள் அந்த வாயிலைப் பயன்படுத்தட்டும், வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள், இணைச் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள் வரையில் வருகிறார்கள். ஆனால் சட்டப் பேரவையினுடைய மாண்பை மதிக்கின்ற வகையில், பணியாற்றுகின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் வருவதற்கு நீங்கள் அனுமதி மறுக்கின்றீர்கள். இன்னும் ஒன்று, சட்டமன்ற உறுப்பினர்களுடைய தலைவர், துணைத் தலைவர், கொறடா ஆகியோருடைய உதவியாளர்கள்கூட வரமுடியவில்லை. எங்களுடைய அலுவலகத்தை நாங்களே சென்று துடைத்து, நாங்களே குடிநீர் எடுத்துக்கொண்டு போய் வைக்க வேண்டிய ஓர் அவலம் ஏற்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் பேரவைத் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். தயவுசெய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும், தலைவர், துணைத் தலைவர், கொறடா ஆகியோருடைய உதவியாளர்களையாவது உள்ளே வருவதற்கு அனுமதிக்கவும். இன்னும் பெருந்தன்மையோடு, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுடைய . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேல்முருகன், we will discuss the matter in my chamber. Please sit down. (குறுக்கீடு) முடிந்துவிட்டது. நான் சொல்லிவிட்டேன் அல்லவா? என்னுடைய அறைக்கு வாருங்கள். Discuss பண்ணிக்கொள்வோம். அவையில் இதுகுறித்து discuss பண்ண வேண்டாம். (குறுக்கீடு) என்னுடைய அறைக்கு வாருங்கள். அங்கு வைத்து பேசிக்கொள்வோம்.

முற்பகல் 11–20

7. வரவு–செலவுத் திட்டம், 2010–2011, பொது விவாதம்–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010–2011 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீது பொது விவாதம். முதலில், மாண்புமிகு